To indi...

கலைஞர் 100
1924 - 2023

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பதிவுத்துறை - ஈரோடு பதிவு மாவட்டம் - திரு.P.கார்த்திக் என்பவர் கருணை அடிப்படையில் 06.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறை செய்து - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

<u>வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை</u>

அரசாணை (டி) எண்.348 நாள் 16.11.2023

சோபகிருது, ஐப்பசி - 30,
திருவள்ளுவர் ஆண்டு, 2054.
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் ஆணை எண்.19016/கே2/ 2022, நாள் 22.09.2022.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.19016/கே2/ 2022, நாள் 11.08.2023.

----------

<u>ஆணை:</u>

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரின் கடிதத்தில், பதிவுத்துறையில், ஈரோடு பதிவு மாவட்டம் பெருந்துறை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராகப் பணிபுரிந்தபோது, 16.03.2022 அன்று பணியிடை மரணமடைந்த திரு.அ.பாண்டுரங்கன் என்பவரின் மகன் திரு.P.கார்த்திக் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க கோரி 11.04.2022 அன்று விண்ணப்பித்தார் என்றும், அன்னாரது கோரிக்கை கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்குவதற்கு நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு தனியர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளை பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பதிவுத்துறை தலைவரால் பணிநியமனம் வழங்கி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, திரு.P.கார்த்திக், 06.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திரு.P.கார்த்திக் இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பதிவுத்துறை தலைவர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி பதிவுத்துறை தலைவரின் கருத்துருவை பரிசீலனை செய்து ஈரோடு பதிவு மாவட்டம் பெருந்துறை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராகப் பணிபுரிந்தபோது, 16.03.2022 அன்று பணியிடை மரணமடைந்த திரு.அ.பாண்டுரங்கன் என்பவரின் மகன் திரு.P.கார்த்திக் என்பவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பதிவுத்துறையில் ஈரோடு பதிவு மாவட்டத்தில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 06.10.2022 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பா.ஜோதி நிர்மலாசாமி**
**அரசு செயலாளர்**

**<u>பெறுநர்:</u>**

பதிவுத்துறை தலைவர், சென்னை-28. (இணைப்புடன்)
திரு.P.கார்த்திக், இளநிலை உதவியாளர்,
ஈரோடு பதிவு மாவட்டம்,
(பதிவுத்துறை தலைவர், சென்னை-28 வழியாக)
இருப்புக் கோப்பு/உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

17/11/2023.

**பிரிவு அலுவலர்**

17/11/23 2/4